KEMENTERIAN SUMBER MANUSIA

# “KERATAN AKHBAR KESUMA”

## RABU
## 4 Mac 2026

| Akhbar | Berita Harian |
|---|---|
| Tarikh | 4 Mac 2026 |
| Ruang | Nasional |
| Muka Surat | 20 |

# Majikan ada rekod buruk tidak dibenarkan ambil pekerja asing

## KESUMA ambil langkah proaktif pastikan aspek perlindungan diperkukuh

Oleh Saadiah Ismail
Saadiah_ismail@bh.com.my

**Kuala Lumpur:** Kementerian Sumber Manusia (KESUMA) menegaskan majikan mempunyai rekod pelanggaran perburuhan, gagal mematuhi perintah mahkamah atau sabitan berhubung buruh paksa tidak dibenarkan menggajikan pekerja asing.

Menteri Sumber Manusia, Datuk Seri R Ramanan, berkata kerajaan memandang serius sebarang bentuk penindasan terhadap pekerja, terutama golongan rentan seperti pekerja migran, khususnya berkait penahanan pasport oleh majikan dan isu gaji tidak dibayar.

Katanya, bagi membasmi perbuatan ini, KESUMA sudah dan sedang mengambil langkah proaktif bagi memastikan perlindungan pekerja asing diperkukuh.

"Dalam hal ini, kerajaan mengenakan syarat kelulusan penggajian yang ketat di bawah seksyen 60K Akta Kerja 1955 (Akta 265), termasuk pendakwaan terhadap majikan yang melanggar peruntukan akta berkenaan.

"Selain itu, kerajaan turut memperkukuh penguatkuasaan undang-undang melalui pemeriksaan dan pemantauan berfokus oleh Jabatan Tenaga Kerja (JTK) serta tindakan tegas," katanya dalam jawapan bertulis di laman sesawang Parlimen.

Ramanan menjawab soalan Ahli Parlimen Selayang, William Leong mengenai langkah semasa yang sudah dan sedang dijalankan kementerian bagi membasmi amalan penderaan pekerja migran khususnya yang berkait penahanan pasport atau dokumen pengenalan oleh majikan serta isu gaji tidak dibayar dan tahap keberkesanan langkah itu.

### Adu menerusi e-Aduan

Mengulas lanjut, Ramanan berkata, kerajaan menyediakan mekanisme aduan yang mudah diakses, iaitu melalui aplikasi e-Aduan di bawah ePPAx, pekerja asing boleh menyalurkan aduan secara terus kepada JTK tanpa melalui orang tengah.

> Kerajaan akan memastikan keperluan pekerja asing dalam industri sentiasa dioptimumkan supaya kelangsungan perniagaan dapat diteruskan
>
> *R Ramanan, Menteri Sumber Manusia*



"Seterusnya dari aspek perlindungan sosial, pekerja asing diwajibkan dilindungi di bawah Akta Keselamatan Sosial Pekerja 1969 (Akta 4), iaitu bagi Skim Bencana Kerja dan Skim Keilatan Pekerja Asing yang memberikan perlindungan menyeluruh terhadap kemalangan, keuzuran dan kematian.

"KESUMA turut melaksanakan Pelan Tindakan Nasional Mengenai Buruh Paksa (2021-2025) sebagai komitmen untuk membanteras amalan buruh paksa melalui pendekatan pencegahan, perlindungan dan pendakwaan," katanya.



*Kerajaan melalui KESUMA komited melindungi nasib pekerja asing daripada dimanipulasi majikan tak bertanggungjawab.* (Foto hiasan)

Katanya, kerajaan akan memastikan keperluan pekerja asing dalam industri sentiasa dioptimumkan supaya kelangsungan perniagaan dapat diteruskan.

"Namun, keperluan ini berlandaskan kepada prinsip keutamaan kepada pekerja tempatan, pematuhan undang-undang perburuhan dan konsep penawaran dan permintaan mengikut kuota ditetapkan kerajaan," katanya.

| | |
|---|---|
| Akhbar | Makkal Osai |
| Tarikh | 4 Mac 2026 |
| Ruang | Nation |
| Muka Surat | 13 |


முதல் பக்கத் தொடர்ச்சி

## 50 மீட்டர் தூரத்தை...

சாலையை அமைக்க வேண்டிய அவசியம் மாநில அரசுக்கு ஏன் வந்தது?

ஜாலான் சுங்கை லோங்கிலிருந்து 3.3 மில்லியன் ரிங்கிட் மதிப்பிலான 383 மீட்டர் நீளமுள்ள சாலை அமைக்கும் திட்டத்தை மாநில அரசு பரிந்துரைத்துள்ளது. இது குடியிருப்பிலிருந்து மிக நீண்ட தொலைவிலான சாலையாக இருப்பதால் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் வெகு தொலைவு சென்று வர நிர்பந்திக்கப்படுகின்றனர்.

காஜாங் நகராண்மைக் கழகம் ஒப்புக் கொண்டபடி 50 மீட்டர் குறுகிய சாலையே எங்களுக்கு வேண்டும். அதை விடுத்து மிக நீண்ட தொலைவிலான சாலைத் திட்டம் தொடர்பான எந்தப் பரிந்துரையையும் நாங்கள் நிராகரிப்போம் என்று அவர் சொன்னார்.

2009 முதல் இழுபறியில் இருந்து வரும் ஆலயத்திற்கான நுழைவுச்சாலை பிரச்சினையில் மாநில அரசு இறுதி முடிவை எட்டியுள்ளதாக சிலாங்கூர் மாநில அரசு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.பாப்பா ராய்டு கடந்த பிப்ரவரி 6ஆம் தேதி அறிவித்தார்.

ஆலய நிலம்1988 முதல் ஆலயப் பயன்பாட்டிற்காக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் நுழைவுச்சாலை சிக்கல்கள், பரிந்துரைக்கான ஒப்புதல் கிடைக்காததால் ஆலய சீரமைப்புப்பணிகளைச் செயல்படுத்துவதில் பெரும்பாலும் தாமதம் நிலவுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட திட்ட அனுமதியில் ஜாலான் சுங்கை லோங்கிலிருந்து ஒதுக்கப்பட்ட சாலை வழியாக மட்டுமே ஆலய வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறது.

தற்போதுள்ள குடியிருப்பு சாலையைப் பயன்படுத்தி தற்காலிக சாலை அமைக்கும் திட்டம் நிராகரிக்கப்பட்டது. குடியிருப்பாளர்களின் எதிர்ப்பாலும் பாதுகாப்புக் காரணங்களாலும் அது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதன் இறுதி முடிவாக ஜாலான் சுங்கை லோங்கிலிருந்து சுமார் 383 மீட்டர் நீளம் கொண்ட ஒரு புதிய சாலையை 3.3 மில்லியன் ரிங்கிட் செலவில் நிர்மாணிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று அவர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தார்.

ஆயினும் சிலாங்கூர் மாநில மந்திரி பெசாராக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி பதவிக்கு வந்த பிறகுதான் ஆலய சாலை தொடர்பான சர்ச்சை எழுந்ததாக தனபாலன் குற்றஞ்சாட்டினார்.

உண்மை என்னவென்றால் இந்த ஆலயம் வீடமைப்புக் குடியிருப்பிலிருந்து 50 மீட்டர் தொலைவில் மட்டுமே உள்ளது. இந்த ஆலயம் சட்டவிரோதமானது அல்ல. அதற்குச் சொந்த நிலம் உள்ளது. அமிருடின் பதவிக்கு வருவதற்கு முன்பே காஜாங் நகராண்மைக் கழகம் பல சாலைகளுக்கு ஒப்புதல் அளித்தது. ஆனால் அவை திரும்பப் பெறப்பட்டன.

நீங்கள் ஆறு கிலோமீட்டர் அல்லது ஆயிரம் கிலோமீட்டர் சாலையை அமைக்க விரும்பினாலும் அந்த ஆலயம் இன்னும் குடியிருப்புப் பகுதியிலிருந்து 50 மீட்டருக்குள்தான் இருக்கும் என்பதே உண்மை.

அப்படியானால் மாநில அரசு தற்போதுள்ள 50 மீட்டர் பாதையைப் பயன்படுத்த அனுமதி வழங்குவதில் என்ன பிரச்சினை? நாங்கள் சாலையில் ஒரு கோவிலைக் கட்டவில்லை. பொதுச் சாலைகளை யார் பயன்படுத்தலாம், பயன்படுத்தக்கூடாது என்பது குறித்து சிலாங்கூர் மாநில அரசு எப்போது புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

பிகேஆர் கட்சியின் இரு முன்னோடிகளான டான்ஸ்ரீ காலிட் இப்ராஹிம், டத்தோஸ்ரீ அஸ்மின் அலி ஆகியோரின் தலைமைத்துவத்துடன் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் தலைமைத்துவத்தை தனபாலன் ஒப்பிட்டார்.

டான்ஸ்ரீ காலிட், டத்தோஸ்ரீ அஸ்மின் அலி காலத்தில் இந்த ஆலயப் பிரச்சினை ஒரு சிக்கலாகவே எழவில்லை. ஆலயம் கட்டுவதற்கான விண்ணப்பம் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டது. காஜாங் நகராண்மைக் கழகத்தில் கூட எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லாம் சுமுகமாக நடந்தது. ஆனால் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மந்திரி பெசாராக வந்தபோது எல்லாம் தலைகீழாக மாறியது.

ஆலய நுழைவுச் சாலை தொடர்பான சர்ச்சை நில உரிமை, நகராண்மைக்கழக அதிகாரிகளின் ஒப்புதல், சட்டங்களை அமல்படுத்துவது தொடர்பான நீண்டகாலப் பிரச்சினையாக நீடிக்கிறது.

இந்த ஆலயம் இந்தியர்கள் அதிகமாக குடியிருக்கும் குடியிருப்புப் பகுதியிலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் அமைந்திருந்தாலும் நுழைவாயில் இல்லாததால் இந்த ஆண்டு ஜூலை மாதம் திட்டமிடப்பட்ட சமய நிகழ்ச்சிக்கு ஆலய நிர்வாகம் இன்னும் எந்த ஏற்பாடுகளையும் செய்ய முடியவில்லை.

இக்குடியிருப்பில் பெரும்பான்மையாக உள்ள பிற மதத்தினர் ஆலயத்திற்கான நுழைவுச் சாலையை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக மாநில அரசு காரணம் கூறுவதாகச் சொல்லப்படுகிறது.

ஆயினும் 2024 வரை காஜாங் மாநகர் மன்றத்தின் சொத்துடைமைத் தரவுகளின் அடிப்படையில் இப்பகுதியில் மலாய்க்காரர் அல்லாதவர்களே பெரும்பான்மையாக உள்ளனர் என்பதைக் காட்டுவதாக இணைய ஊடகம் ஒன்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

ஏனெனில் இந்த ஆலயம் தாமான் கோப்பராசி செராஸில் உள்ள இந்துக்களால் மட்டுமல்ல அருகிலுள்ள பகுதிகளில் வசிப்பவர்களாலும் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

நில உரிமையாளர்களின் தரவுகள்படி தாமான் கோப்பராசி கியூபெக்ஸில் 379 மலாய்க்காரர்களும் 38 சீனர்களும் 359 இந்தியர்களும் 6 பிற இனத்தவர்களும் உள்ளனர்.

தாமான் கோப்பராசி கியூபெக்ஸுடன் தாமான் டேசா பாருவை இணைத்தால் மொத்த நில உரிமையாளர்களின் எண்ணிக்கை 590 மலாய்க்காரர்கள், 261 சீனர்கள், 731 இந்தியர்கள், 60 பிற இனத்தவர்கள் ஆவர்.

அடுக்குமாடி வீட்டின் நிலங்களைப் பொறுத்தவரை இந்தப் பகுதியில் மொத்தம் 126 மலாய்க்காரர்கள், 351 சீனர்கள், 140 இந்தியர்கள், 101 பிற இனத்தவர்கள் உள்ளனர். பெரும்பான்மையானவர்கள் தாமான் கோப்பராசி கியூபெக்ஸில் உள்ளனர். இதில் 331 சீனர்களும் 127 இந்தியர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- மலேசியா கினி

| Akhbar | Nanban Tamil Daily |
|---|---|
| Tarikh | 4 Mac 2026 |
| Ruang | Nation |
| Muka Surat | 5 |

# தொழிலாளர்களை தவறாக நடத்திய முதலாளிகளுக்கு வாய்ப்பு தரப்படாது



கோலாலம்பூர், மார்ச் 4- தொழிலாளர்களுக்கான விதிமுறைகளை மீறிய முதலாளிகள் அந்நிய தொழிலாளர்களை பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ ஆர்.ரமணன் மக்களவையில் தெரிவித்தார்.

தொழிலாளர்களை தவறாக நடத்துக்கின்ற முதலாளிகளின் போக்கை அரசாங்கம் மிகக் கடுமையாக கருதுகிறது. குறிப்பாக அந்நிய தொழிலாளர்கள் விஷயத்தில் அவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் இருப்பது அவர்களின் பயண கடப்பிதழை தங்கள் வசம் வைத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்றார் அவர்.

இந்த நடைமுறைகள் அனைத்தும் அகற்றப்படும். அந்நிய தொழிலாளர்கள் உட்பட தொழிலாளர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவர்களை தவறாக நடத்தி முதலாளிகள் அந்நிய தொழிலாளர்களை பெறும் வாய்ப்பு நிறுத்தப்படும் என்றார் அவர்.

செலாயாங் நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் லியோங் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார். அந்நிய தொழிலாளர்கள் தவறாக நடத்தப்படுவது தொடர்பில் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கை என்னவென்று அவர் கேட்டார்.

தொழிலாளர்கள் புகார் செய்ய எளிதான வழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கும் பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் தொழிலாளர் கொத்தடிமைகளை துடைத்தொழிக்கும் முயற்சியிலும் அரசாங்கம் இறங்கி உள்ளது என்றார் அவர்.